தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2016

ஆண்டு: 8 திகதி: 18-06-16

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி மா. சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்:

-----------------------------------------------------

## 1. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக:
(20 புள்ளிகள்)

பாரி பறம்பு நாட்டு மன்னன். அறிஞர்களையும் வறியோர்களையும் ஆதரித்து மகிழும் அரும் பண்பாளன். குறுநில மன்னனாகிய பாரி பெருங் கொடை வள்ளலாக விளங்கினான். பாரியின் உள்ளத்தில் அன்பும் அறமும் செழித்து வளர வளரப் பறம்புநாட்டிலும் வளம் பல நிரம்பி மலர்ந்தன. வள்ளல் பாரியின் அன்பு நிழலில் வாழ்ந்த பறம்புநாட்டு மக்கள் அல்லல் என்பதை அறியாராய் அறத்தைக் காத்து ஆக்கம்பெ பெருக்கினார்கள். ஈந்துவக்கும் பாரியின் இனிய பண்புகள் நல்லிசைப் புலவராகிய கபிலரின் உள்ளத்தை அள்ளிவிட்டன. புலமை நலம் படைத்த கபிலர் பாரியின் புகழைப் பாடிப் பாடி ஆவி தளிர்த்தார்.

பாரி பயன்கருதாது கொடுக்கின்ற பண்பாளன் என்பதை உணர்ந்த கபிலர் மிகவும் மகிழ்ந்தார். மாரி இந்த உலகத்தை வாழ்விப்பதுபோலவே பாரியும் வாழ்விக்கின்றான். மாரியினால் மக்களும் விலங்கினங்களும் மட்டுமல்ல, புல்லும் கொடியும் மரமும் தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து பயன் தருகின்றன. பாரியும் மக்களுக்கு மட்டும் வாரி வழங்கிப் பாவும் பாராட்டும் பெறுகின்ற அளவில் நிற்பவன் அல்லன். கொடுத்தால் புகழ் பெருகும் என்ற எண்ணத்துடன் கொடுக்கின்ற வாணிகக் கொடையாளன் அல்லன். பிற உயிர்கள் படுகின்ற அல்லலை கண்டு ஆவி உருகிக் கொடுக்கும் அருளாளன்.

ஒருநாள் பாரி தேரில் ஏறி ஊரின் வளங்காணச் சென்றான். செல்லும் வழியில் ஒரு முல்லைக் கொடியை நோக்கினான். முல்லைக் கொடியின் துன்ப நிலையை உணர்ந்து, உள்ளம் உருகினான். தேரில் நின்று இறங்கி, நேரில் சென்று முல்லைக் கொடியின் வாட்டத்தை நீக்க என்ன வழி என்று நினைத்தான். கொழுவிப் படர்ந்து தளைத்து மலரக் கொழுகொம்பில்லாமல் முல்லைக் கொடி குழைந்து கிடந்த நிலையை நினைக்க நினைக்க அவனின் உள்ளம் நீராய் உருகியது. உடனே ஒரு முடிவுக்கு வந்தான். தான் ஏறிவந்த தேரைக் கொண்டுவந்து முல்லைக் கொடியின் பக்கத்தில் நிறுத்தினான். ஆராத அன்புடன் அந்த முல்லைக் கொடியை அணைத்துத் தூக்கித் தேரில் படர விட்டான். முல்லைக் கொடி தேரின்மேல் படரும் காட்சியைக் கண்டான். பச்சைக் குழந்தை தன் தளிர்க்கையால் தாயின் முகத்தைத் தடவும் பொழுது தாயின் உள்ளம் தழைத்தல் போன்ற மகிழ்ச்சியுடன் வள்ளல் பாரி விளங்கினான். மகிழ்ந்த பாரி தான் மன்னன் என்பதையும் மறந்து, தேரில் வந்த வீதி வழியே காலால் நடந்து தன் அரண்மனையை அடைந்தான்.

*(நன்றி: தன்னேர் இலாத தமிழ் - வித்துவான் க வேந்தனார்)*

1. பாரி மன்னன் எப்படியான பண்பைக் கொண்டவன்?

..............................................................................................................................

..............................................................................................................................

2. பாரி மன்னனின் புகழைப்பாடிய புலவர் யார்?

3. மழையினால் என்ன நன்மை கிடைக்கின்றது என்று மேற்கண்ட உரைப்பகுதியில் குறிப்பிடப்படுகின்றது?

4. பாரி தேரில் ஏறி ஊர்வளம் காணச் சென்ற போது ஏன் கவலையடைந்தான்?

5. கோடிட்ட இடங்களை நிரப்புக:
ஆராத அன்புடன் அந்த ......................அணைத்துத் தூக்கித் தேரில் படர விட்டான்.

6. இந்த கட்டுரை எந்த நூலிலிருந்து பெறப்பட்டது?

7. இக்கட்டுரைக்கு பொருத்தமான ஒரு தலைப்பு என்ன?

**2. பின்வரும் சொற்களைப் பாவித்து 5 சொற்களுக்குக் குறையாது வசனம் அமைக்கவும். (15 புள்ளிகள்)**

1. தமிழ்க் கல்வி நிலையம்

2. தமிழ் மொழி

3. ஊடகங்கள்

4. தேசிய கீதம்

5. சனிக்கிழமை

6. விளையாட்டு

7. கலைவிழா

8. புகையிரதம்

9. பாடசாலை

10. சூரியன்

3. **பின்வரும் தொடர் வாக்கியங்களை தனி வாக்கியங்களாக எழுதுக. (10 புள்ளிகள்)**

1. நான் கடைக்குச் சென்று புத்தகத்தை வாங்கி ஒரு நகைச்சுவைக் கதையை படித்தேன்.

2. வைத்தியர் வந்து நோயாளியைப் பரிசோதித்து மருந்து கொடுத்தார்.

3. அவள் தையற்காரனிடம் பணத்தைக் கொடுத்து ஆடையைப் பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்றாள்.

4. கண்ணன் கோயிலுக்குச் சென்று கடவுளைக் கும்பிட்ட பின் வீட்டிற்குச் சென்றான்.

5. பாடசாலை மண்டபத்தில் இருந்த மாணவர்கள் தமிழ்மொழி வாழ்த்து பாடியபின் வகுப்பிற்குச் சென்றார்கள்.

**4. கீழ்வரும் பாடலைப் படித்தபின்பு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள். (10 புள்ளிகள்)**

"இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளி நாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்."
*(சுப்பிரமணிய பாரதியார்)*

1 பாரதியார் எவ்விதமான, எதனை இயற்றுதல் வேண்டும் என விரும்பினார்?

............................................................

............................................................

............................................................

2 இறவாத புகழுடைய புதுநூல்கள் என்ற தொடர் மூலம் நாம் விளங்கிக் கொள்ளும் கருத்து யாது?

............................................................

............................................................

............................................................

3 வெளிநாட்டவர் எப்பொழுது எமது ஆக்கத்தைக் கண்டு வணக்கம் செய்வர்?

............................................................

............................................................

............................................................

5. **பின்வரும் அட்டவணையில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வானொலியில் அறிவிப்பதற்கு ஏற்ற முறையில் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியொன்றை தயாரிக்கவும். (10 புள்ளிகள்)**

| | |
|---|---|
| பிறந்த நாள் கொண்டாடுபவர் | செல்வன் பிரியன் |
| பெற்றோர் | செந்தில்<br>வாணி |
| கொண்டாடும் இடம் நேரம் | (ஏற்ற இடம் ஒன்றைக் குறிப்பிடுக) |
| வாழ்த்துபவர்கள் | பெற்றோர், தாத்தா, பாட்டி, மாமா, மாமி, உற்றார் உறவினர்.<br>(வேறு உறவு முறைகளையும் குறிப்பிடலாம்) |
| வேறு பயனுள்ள சொற்கள் | பல்லாண்டு காலம், சீரும் சிறப்பும், பல்கலையும் கற்று |

6. உமது வெளிநாட்டு உறவினர் ஒருவருக்கு நீர் இங்கு கொண்டாடிய அல்லது பார்த்து இரசித்த பண்டிகை ஒன்றைப்பற்றி 75 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக. (15 புள்ளிகள்)

7. **கீழே தரப்பட்ட தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்து 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)**

- ஒரு புத்தகத்தின் சுயசரிதை
- உண்மை பேசுதல் உயர்வைத் தரும்
- இந்த வருட ஆரம்பத்தில் நடைபெற்ற எமது கல்வி நிலையத்தின் கலைவிழா